பக்கங்கள் - 08

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005
இல.44,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1000/= + 300/=

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 22 செவ்வாய்க்கிழமை (07.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 110

## 19 மாவட்டங்களில் 9ம் திகதி 10 மணி நேரம் ஊரடங்கு தளர்வு

### யாழ்ப்பாணம் உட்பட இடர் வலயங்களில் தொடர் ஊரடங்கு

(கொழும்பு)

இடர் வலயங்களாக இனம் காணப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் 02

### ஊரடங்கில் காரணமின்றி

## யாழ்.நகர் வலம் வந்த 37 பேர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு வேளையில் காரணமின்றி நகருக்குள் வருகை தந்த 37 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

27 ஆண்களும் 10 பெண்களும் உள்ளடங்கலாக 37 பேர் கைது செய்யப்பட்டனர். 02

### தற்போதைய நிலைமையைக் கொண்டு

# கொரோனா தொற்றுடையவர்கள் யாழில் இல்லை எனக் கூற முடியாது

### யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எ.தேவநேசன்



- சுவிஸ் மத போதகரின் வருகையாலேயே யாழ்.நிலைமை மோசமானது
- கொரோனா தொற்றாளர்கள் வெளியிலும் இருக்கலாம்
- மக்கள் ஒத்துழைக்காவிட்டால் பெரும் அனர்த்தம் உருவாகும்
- யாழ் மக்கள் இன்னும் 2-3 வாரங்கள் கட்டுப்பாடுகளுடன் இருக்க வேண்டும்
- கொரோனாவுக்கு சிகிச்சையளிக்க யாழில் வசதியில்லை

02

### சந்தேக நபருக்கு கொரோனா

## கைது செய்யச் சென்ற 38 பொலிஸ் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

சந்தேகநபர்களை கைது செய்ய சென்றமையால், கொரோனா அச்சத்தில் ஒரு பொலிஸ் பொறுப்பதிகாரி, ஒரு குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி 02

### பிறந்தநாள் கொண்டாடிய

## வாள்வெட்டுடன் தொடர்புடைய மூவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு வாள்வெட்டுக்கள் மற்றும் வன்முறைகளுடன் தொடர்புடைய ஆவா என பொலிஸாரால் விழிக்கப்படுபவரின் பிறந்தநாளைக் கொண்டாடியவர்கள் இராணுவத்தினரால் 02

## பருத்தித்துறையில் உயிரிழந்தவருக்கு

### கொரோனா இல்லை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்த நபருக்கு கொரோனோ தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக 02

## அத்தியாவசிய நுகர்வு பொருட்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்றால்

## கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய நுகர்வு பொருட்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது ஊரடங்குச் சட்ட விதிகளின் 02

## 178

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 178 ஆக அதிகரித்துள்ளது.

வைரஸ் தொற்றுக்கு 03

### யாழில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின்

## விலை உயர்வு, தட்டுப்பாடு, பதுக்கல் தொடர்பில் விற்பனை நிலையங்களில் நேரடி ஆராய்வு

### பொருட்களின் கையிருப்பும் கணக்கெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தொடர் ஊரடங்கினால் அத்தியாவசிய பொருட்களின் திடீர் விலை உயர்வு, தட்டுப்பாடு மற்றும் பதுக்கல் தொடர்பான முறைப்பாடுகளையடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் விசாரணை உத்தி 02

## யாழில் ஊரடங்கு வேளையில் 6 பேருந்துகளில் டீசல் திருட்டு

### கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோண்டாவில் டிப்போவில் தரித்து நின்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஆறு பேருந்துகளில் டீசல் திருடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய 03

## யாழ்.நகர் வலம்...

யாழ்ப்பாணம் நகரில் நேற்று மருந்தகங்கள், வங்கிக் கிளைகள் திறந்த நிலையில் மக்களின் வருகை அதிகமாகக் காணப்பட்டது.

இதனால் முற்பகல் 10 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வந்திறங்கிய யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் வீதித் தடையை ஏற்படுத்தி வாகனங்களில் செல்வோரிடம் விசாரணை நடத்தினர்.

இதன்போது, மருந்தகங்களுக்கு செல்வதற்கான மருத்துவரின் சிட்டை காண்பித்தவர்களும் அத்தியாவசிய சேவைகளுக்கான அடையாள அட்டை வைத்திருந்தவர்களும் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். காரணமின்றி பயணித்தவர்களை பொலிஸார் கைது செய்தனர். (ம-3,114)

## 19 மாவட்டங்...

மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

ஏனைய 19 மாவட்டங்களிலும் வரும் ஏப்ரல் 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்கு சட்டம் அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாக பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்கு உதவும் நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே என்பதால் அந்த நடைமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் பொறுப்புடன் பின்பற்றுமாறு அரசு மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

ஊரடங்கு சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் வேறு பொருட்களை வீடுகளில் இருந்தே பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தொடர்ச்சியாக வழங்கலை மேற்கொள்ள அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

எந்த மாவட்டத்திலாயினும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறு தேயிலை தோட்டங்கள், ஏற்றுமதி பயிர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட மக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகவே கருதப்படும். எவரும் இந்த கிராமங்களுக்கு உள்வருவதோ அல்லது வெளியேறுவதோ மறு அறிவித்தல் வரை முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது என்றுள்ளது. (ம-3)

## வாள்வெட்டுடன்...

சுற்றிவளைக்கப்பட்டு 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர் உள்ளிட்ட பலர் தப்பித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பிறந்தநாள் கொண்டாட்டம் மல்லாகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

ஆவாவின் பிறந்தநாள் கொண்டாட்டம் அவரது நண்பர்களால் இணைந்து மல்லாகத்தில் உள்ள வீடொன்றில் நேற்று நடத்தப்பட்டது. அதுதொடர்பில் தகவல் கிடைத்து அந்த வீட்டை இராணுவத்தினர் முற்றுகையிட்டுள்ளனர்.

அதன்போதே 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆவா உள்ளிட்ட கொண்டாட்டத்தில் பங்கேற்ற பலர் இராணுவத்தினரின் வருகையறிந்து அங்கிருந்து தப்பித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும்பொலிஸார், ஊரடங்கு வேளையில் பொலிஸ் அனுமதியின்றி சட்டத்துக்கு புறம்பாக கூட்டம் சேர்த்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## பருத்தித்துறை...

சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை பருத்தித்துறை கந்த உடையார் ஒழுங்கையை சேர்ந்த 53 வயதுடைய நபர் ஒருவர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சில மணிநேரத்தில் அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து திடீரென ஏற்பட்ட மரணம் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டதை தொடர்ந்து அவருடைய உடற்கூற்று மாதிரிகள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு இருந்தது.

இப் பரிசோதனை அறிக்கையில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

அவர் அண்மையில் கம்போடியா நாட்டுக்கு சென்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-60)

## அத்தியாவசிய...

கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என உல்லாச பயண விமான போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கம்பஹா செயலகத்தில் இடம்பெற்ற அரச அதிகாரிகளின் உயர்மட்ட கலந்துரையாடலின் போது அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்போது அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வர்த்தகர்கள் பொருட்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்வதாக பெரும் எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது குறித்து நுகர்வோர் அதிகாரசபையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன் என்றார். (ம-3)

## விலை உயர்வு...

யோத்தர்களினால் நேற்று பல விற்பனை நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அத்துடன் நியாயமான விலைகளில் மக்களுக்கு பொருட்கள் கிடைப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு வர்த்தக நிலையங்களில் உள்ள அத்தியாவசிய பொருட்களின் மொத்த இருப்பும் கணக்கெடுக்கப்பட்டன.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் நேற்று யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, திருநெல்வேலி, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஆகிய இடங்களில் உள்ள விற்பனை நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் இருப்புக் கணக்கும் எடுக்கப்பட்டது .

நேற்று பரிசோதிக்கப்பட்ட 10 மொத்த வியாபார நிலையங்களில் காணப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு விபரம் பின்வருமாறு,

ஆட்டக்காரி அரிசி 10 மெற்றிக்தொன், கோதுமை மா 157.5 மெற்றிக்தொன், மஞ்சள் பருப்பு 19 மெற்றிக்தொன், கீரி சம்பா 59 மெற்றிக்தொன்.

நேற்றைய சோதனை நடவடிக்கையில் நியாயமான விலைகளில் மக்களுக்கு பொருட்கள் கிடைப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு மேற்படி நடவடிக்கை தொடர்பான தேவைப்பாடுகளும் ஆராயப்பட்டுள்ளன. (ம-3,10)

## கொரோனா...

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற உடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக யாழ் மாவட்டத்தில் தொடர்ச்சியான விழிப்புணர்வுகளை மேற்கொண்டுள்ளோம். இந்த விடயம் தொடர்பாக முன்னரை விட மக்கள் விழிப்படைந்துள்ளார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்தால் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதில் இக்கட்டான நிலை உருவாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 14 சுகாதார வைத்தியர் அதிகாரி பிரிவுகளிலும் கொரோனா தொற்று கட்டுப்பாட்டுப் பணிகள், நபர்களைத் தனிமைப்படுத்தல் மற்றும் நபர்களைக் கண்டறிதல் என அத்தனை செயற்பாடுகளையும் சுகாதார மருத்துவ அதிகாரிகள், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே பிரதேச மட்டத்தில் உள்ள 14 சுகாதார மருத்துவ அலுவலகர் பிரிவுகளில் உள்ள அலுவலர்களும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உள்ள சில அதிகாரிகளும் பிராந்திய மருந்து வழங்கல் அலுவலகத்தின் பணியாளர்களும் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் என சுமார் ஆயிரத்து 300 பேரை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி வைத்திருந்தோம்.

இந்த நிலையில் முதலாவது தொற்றாளரான தாவடியைச் சேர்ந்த நபர் மார்ச் மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு கொரோனா தொற்று உள்ளமையை உறுதிப்படுத்தி மார்ச் 22ஆம் திகதி எமக்கு அறிக்கை கிடைத்தது.

எனினும் அவருக்கு கொரோனா தொற்று உள்ளது என்ற அறிக்கை 22ஆம் திகதி கிடைப்பதற்கு முன்னதாகவே அவருடன் நேரடியாகவும் சந்தர்ப்பசூழ்நிலையிலும் தொடர்பு ஏற்பட்ட சுமார் 200 பேரை நாம் அடையாளப்படுத்திவிட்டோம். அதனால் அவர்களைப் பாதுகாப்பாக நாம் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திவிட்டோம்.

இந்த விடயத்தில் சுகாதார மருத்துவ அதிகாரிகளினதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினதும் இராணுவத்தினரதும் பெரும் பங்களிப்பு உண்டு. சுயதனிமைப்படுத்தலை எம்மால் ஒழுங்கமைக்கப்பட்டாலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் பக்கபலமாக இருந்தனர். தற்போதும் இராணுவத்தினர் அந்தப் பணியை முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறு எம்மால் விரைந்து செயற்பட முடிந்தமையால்தான் யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றை ஓரளவு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முடிந்தது.

மேலும் போதகருடன் நெருக்கமாகப் பழகிய 20 பேரை பலாலியில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைத்தோம். அவர்களது கண்காணிப்புக் காலம் 2 வாரங்களில் நிறைவடைய வீடுகளுக்குச் செல்ல அனுமதியளிக்கவேண்டிய நிலையில் அவர்களை பரிசோதனைக்குட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. அவர்களின் பரிசோதனையின்படி 20 பேரில் 6 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் மிகுதியாக உள்ள 14 பேரும் மீண்டும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 319 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்தவகையில்,

தாவடியில் 163 குடும்பங்கள், மானிப்பாயில் 70 குடும்பங்கள், ஆனைக்கோட்டையில் 40 குடும்பங்கள், நாவந்துறையில் 3 குடும்பங்கள், அரியாலையில் 20 குடும்பங்கள், பூம்புகாரில் 25 குடும்பங்கள், தெல்லிப்பளையில் ஒரு குடும்பம், கோப்பாயில் 18 குடும்பங்கள் மற்றும் பருத்தித்துறையில் ஒரு குடும்பமும் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றில் தாவடி, அரியாலை, நாவந்துறை மற்றும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 50 பேரின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. அவர்களுக்கு தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமையை வைத்துக்கொண்டு தொற்று இல்லை எனக் கூற முடியாது. ஏனென்றால் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்கள் அனைவரும் விடுவிப்பதற்கு தயாரான நிலையில் நல்ல உடல்நிலையோடு இருந்தவர்கள். எனினும் பரிசோதனையின் பின்னர் அவர்கள் ஆறு பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தலில் உள்ள ஒருவரை ஒரு தடவை பரிசோதனைக்குட்படுத்தும் போது தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துவிட்டால் எம்மால் முடிவு எடுக்க முடியாது. அவரை மூன்றுமுறை பரிசோதனைக்குட்படுத்தும் போதுதான் சரியான முடிவுக்கு நாம் வர முடியும்.

தற்போது 50 பேரின் மாதிரிகளே பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. ஏனையவர்களின் மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளன. யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒரு நாளைக்கு 40 பேருக்கே பரிசோதனை மேற்கொள்ள முடியும். தொடர்ச்சியாக பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

எனவே மக்கள் ஒத்துழைப்பு வழங்காவிடின் நாம் பெரும் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்படுவோம். ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுல் படுத்தப்பட்டு மக்கள் நடமாட்டம் குறைக்கப்பட வேண்டும். கொரோனா தொற்றாளர்கள் வெளியிலும் இருக்கக்கூடும்.

சிகிச்சை அளிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் வசதிகள் இல்லை. எனவே நிலைமையை கட்டுப்படுத்தப்படாவிட்டால் பெரும் அனர்த்தம் உருவாகும். எனவே மக்கள் வீட்டில் இருந்து சுகாதார முறையை கடைப்பிடிக்க வேண்டும்.

குறித்த வைரஸ் தொடர்பில் யாருக்கும் சரியான விளக்கம் இல்லை. இன்றும் உலகம் முழுவதும் ஆபத்தான நிலையில்தான் இருக்கிறது. எனவே ஒத்துழைப்பு வேண்டும். என மேலும் தெரிவித்தார். (ம-3,9)

## இலங்கை வங்கியின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளையானது நடமாடும் வங்கிச் சேவையினை இன்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

அந்த வகையில் காலை 8.30 மணிக்கு மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையம், காலை 9.30 மணிக்கு கல்வயல் துர்க்கை அம்மன் கோவில், காலை 10.30 மணிக்கு மோகனதாஸ் வாசிகசாலை, காலை 11.00 மணிக்கு மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், பிற்பகல் 2 மணி மந்துவில் மேற்கு ஆகிய இடங்களில் நடமாடும் சேவை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கைது செய்யச்...

உள்ளிட்ட 38 பொலிஸார் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஜா-எல, பமுனுகம பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, கெக்கிராவ பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 38 பேரே இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலாத்காரமாக தனியார் இடமொன்றுக்குள் அத்து மீறியமை தொடர்பில் பமுனுகம - தெலபுர பகுதியில் வைத்து கைது செய் யப்பட்ட சந்தேகநபர்

03

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

## கைது செய்யச்...

ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளானதன் காரணமாக பமுனுகம பொலிஸ் உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் சுகவீனமடைந்ததன் காரணமாக றாகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்தே பமுனுகம பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 30 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் குற்றவியல் பிரிவிலுள்ள 8 பேர் உட்பட 38 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பொலிஸ் நிலையத்திற்குள்ளேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## 178...

நேற்று திங்கட்கிழமை மாலை மேலும் இருவர் இலக்கானமை அடையாளம் காணப்பட்டதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் நால்வர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது. இதனுடன் சேர்த்து 38 பேர் இதுவரை குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் தொடர்ந்தும் 139 பேர் சிகிச்சை பெற்று வருவதுடன், கொரோனா நோய்க்கான அறிகுறிகளுடன் 257 பேர் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட 5 பேர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யாழில் ஊரங்கு...

வருவதாவது,

நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் அனைத்தும் கோண்டாவில் பேருந்து நிலையத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தரித்து நின்ற 6 பேருந்துகளில் டீசல் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-3)

# பாராளுமன்றத்தை கூட்டமாட்டேன் தேர்தலே எனது எதிர்பார்ப்பு

## ஜனாதிபதி கோட்டாபய உறுதி



கொரோனா வைரஸ் பரவல் நிலைமையை அவசரகால நிலைமையாக கருதவில்லை. அவசரகால சட்டமொன்றை உருவாக்குவது தவிர்ந்து வேறு எந்தவொரு நிலைமையிலும் பாராளுமன்றத்தை கூட்டவும் முடியாது.

ஆகவே பாராளுமன்றத்தை கூட்டும் நிலைப்பாட்டில் தான் இல்லையென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது உறுதியான நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

வெகு விரைவில் தேர்தலை நடத்துவதே தனது எதிர்பார்ப்பு எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் பிரதான அமைச்சர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு கோரிக்கையை முன் வைத்துள்ளார். அதற்கு பதில் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (ம-3)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| நோய்த் தொற்று சந்தேகத்தில் | தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 257 | 178 | 038 | 005 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 1,330,497 | 277,708 | 73,875 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 1,330,497 | 57,635 | 73,875 | +4,450 |
| ஐ.அமெரிக்கா | 356,653 | 19,980 | 10,516 | +900 |
| இத்தாலி | 132,547 | 3,599 | 16,523 | +636 |
| ஸ்பெய்ன் | 135,032 | 3,386 | 13,169 | +528 |
| சீனா | 81,708 | 39 | 3,331 | +2 |
| ஜேர்மனி | 101,779 | 1,656 | 1,664 | +80 |
| பிரான்ஸ் | 98,010 | 5,171 | 8,911 | +833 |
| ஈரான் | 60,500 | 2,274 | 3,739 | +136 |
| ஐ.இராச்சியம் | 51,608 | 3,802 | 5,373 | +439 |
| இந்தியா | 4,778 | 489 | 136 | +18 |

இன்று அதிகாலை 1.10 நிலைவரப்படி

# 24 மணித்தியாலத்தில் 1200 பேர் பலி! அமெரிக்காவை அலற விடும் கொரோனா

(வோஷிங்டன்)

உலகையே உலுக்கிவரும் கொடிய கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அமெரிக்காவில் கடந்த 24 மணித்தியாலத்தில் அதிகபட்சமாக 1200 பேர் உயிரிழந்த நிலையில் நேற்றுக் காலை 6 மணி நிலவரப்படி பலி எண்ணிக்கை 9 ஆயிரத்து 500ஐ தாண்டியது.

கொரோனா வைரஸால் அமெரிக்காவில் தான் அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 4 இலட்சத்தை நெருங்கி வருகிறது. குறிப்பாக நியூயோர்க் மாநிலம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## கொரோனா வைரஸுக்கு நியூயோர்க்கில் 2 நிமிடத்துக்கு ஒருவர் வீதம் உயிரிழப்பு



(நியூயோர்க்)

நியூயோர்க் மாகாணத்தில் கொரோனா வைரஸிக்கு 2 நிமிடத்துக்கு ஒருவர் வீதம் பலியாகி வருகின்றனர்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்தை நெருங்கி வருகிறது. இதே வேளை பலியானோர் எண்ணிக்கை 9 ஆயிரத்தை நெருங்கி வருகிறது.

நியூயோர்க் மாகாணம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு கொரோனா வைரஸிக்கு பலியானோர் எண்ணிக்கை 4 ஆயிரத்தை எட்டியது. நோய் உறுதி செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை ஒன்றரை இலட்சத்தை நெருங்கி வருகிறது.

நியூஜெர்சி, மிச்சிகன், கலிபோர்னியா, லூசியானா, புளோரிடா, மாசாசுசெட்ஸ், பென்சில்வேனியா ஆகிய மாகாணங்கள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகளுடன் திணறி வருகின்றன. நியூயோர்க் மாகாணத்தில் கடந்த 24 மணிநேரத்தில் 630 பேர் பலியாகினர். நாள்தோறும் இதே அளவுக்கு பலி எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சராசரியாக 2 நிமிடத்துக்கு ஒருவர் வீதம் உயிரிழந்து வருகின்றனர்.

இன்னும் 7 நாட்களில் நியூயோர்க் மாகாணத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பு உச்சத்தை எட்டும் என்று அம்மாகாண ஆளுநர் ஆன்ட்ரூ குவோமோ தெரிவித்தார்.

நியூயோர்க் மாகாணத்தில் வைத்தியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு முகக் கவசங்கள், கவச உடைகள், பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவை பற்றாக்குறையாக உள்ளன. இவற்றை அமெரிக்க நிறுவனங்கள் தயாரிக்க முடியாதது ஏமாற்றமளிப்பதாகவுள்ளது.

இந்தப் பொருட்களை சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பது வேதனையாகவுள்ளது.

நியூயோர்க் மாகாணம் கோரிக்கை விடுத்த 17 ஆயிரம் செயற்கை சுவாச கருவிகள் போதுமானவை அல்ல.

சீனா நன்கொடையாக அளித்த ஆயிரம் செயற்கை சுவாச கருவிகள் வந்து சேரவுள்ளன.

இதற்காக சீன அரசுக்கும், அலிபாபா நிறுவனத்துக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டம் பெறத் தயாராக இருக்கும் மருத்துவ மாணவர்களை மருத்துவம் பார்க்க அனுமதிக்கும் உத்தரவில் கையெழுத்திட்டுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## கொரோனா தொற்றால் பாகிஸ்தானில் பலி எண்ணிக்கை 50-ஐ நெருங்குகிறது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்தை நெருங்கி வருகிறது. இதேவேளை நேற்றுக்காலை 8 மணி நிலவரப்படி பலி எண்ணிக்கையும் 50-ஐ நெருங்கி வருவதாக அந்நாட்டு சுகாதாரப் பணிகள் அமைச்சகம் தெரிவித்தது.

இதேவேளை பஞ்சாப் மாகாணத்தில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் பாகிஸ்தானில் கொரோனா நோயாளிகள் எண்ணிக்கை 50 ஆயிரத்தை எட்டி விடும் என்று அந்நாட்டு அரசு அறிக்கை வெளியிட்டது. மேலும், பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான தேசிய ஒருங்கிணைப்புக் குழு, கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து தினந்தோறும் ஆலோசனை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## கொரோனாவை தடுக்க வரும் 'பிட்கோவேக்'

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் அமைந்துள்ள பிட்ஸ்பர்க் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியின் விஞ்ஞானிகள் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டனர்.

கொரோனா வைரஸை போன்றதொரு வைரஸைப் பற்றி ஆய்வு நடத்திய நிலையில் கொரோனா வைரஸுக்கு தடுப்பூசி கண்டுபிடித்திருக்கிறோம் என்பதுதான் அவர்களின் அறிவிப்பு.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுத்து நிறுத்து கிற வகையில், ஒரு புதிய தடுப்பூசியை விரைவாக வெளியிட முடியும் என்று கூறியுள்ளனர்.

இந்தத் தடுப்பூசி விரல் நுனி அளவிலானது. அதில் சர்க்கரை மற்றும் புரதத்தால் ஆன நுண்ணிய ஊசி இருக்கும்.

இதுதான் கோடிக் கணக்கான மக்களை கொரோனா வைரஸ் பரவுவதிலிருந்து காக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இது பற்றிய தகவல்கள், பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகம் அமைந்துள்ள பென்சில்வேனியா மக்களுக்கு முதலில் நிம்மதி தருவதாக இருக்கிறது.

ஏனெனில் அங்கு 1,500 இற்கும் மேற்பட்டோருக்கு இந்த வைரஸ் தாக்கியிருக்கிறது. 100 இற்கும் அதிகமானோரை பலியும் கொண்டிருக்கிறது.

இந்தத் தடுப்பூசியை தற்போது எலிகளுக்கு செலுத்தி விஞ்ஞானிகள் பரிசோதித்திருக்கிறார்கள். இது கொரோனா வைரஸை வீழ்த்து வதற்கான ஆன்டிபாடிகளை (நோய் எதிர்ப்பு பொருள்) வழங்கியுள்ளது. ஆனாலும் எலிகள் நீண்டகால சோதனைகளுக்கு இன்னும் உட்படுத்தப்படவில்லை. அது மட்டுமல்ல இந்தத் தடுப்பூசியின் பக்கவிளைவுகள் என்னென்ன என்பதுவும் இனித்தான் கண்டறியப்பட வேண்டும்.

இந்தத் தடுப்பூசியை கண்டுபிடித்த விஞ்ஞானிகள், இதற்கு முன்பாக சார்ஸ், மெர்ஸ் போன்ற கொரோனா குடும்ப வைரஸ்கள் பற்றி ஆராய்ச்சி நடத்தி வந்ததுதான், இப்போது கொரோனா தடுப்பூசி கண்டுபிடிப்பதற்கு வழி நடத்தியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## புலிக்கு கொரோனா



(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் சிட்டியிலுள்ள வன உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் புலிக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது.

உலகம் முழுவதையும் கொரோனா வைரஸ் ஆட்டிப்படைத்து வருகிறது. வல்லரசு நாடான அமெரிக்காவில் தான் கொரோனா தற்போது அதிக பாதிப்பை ஏற்படுத்தியது.

அமெரிக்காவில் நேற்றுக் காலை நிலவரப்படி சுமார் 3 இலட்சத்து 36 ஆயிரத்து 673 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது.

இந்நிலையில் மனித சமூகத்தை மிரட்டி வரும் கொரோனா வைரஸ் விலங்குகளைப் பாதிக்காது என்று பரவலாகப் பேசப்பட்டு வந்தது. ஆனால், இந்தக் கூற்றைப் பொய்யாக்கும் வகையில், அமெரிக்காவின் நியூயோர்க் சிட்டியில் அமைந்துள்ள புரேன்ஸ் உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் பெண் புலி ஒன்றுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

உயிரியல் பூங்காவில் பணியாற்றி வந்த நபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானது. எனவே, அந்த நபர் மூலமாக புலிக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மேலும் சில புலிகளுக்கு வறட்டு இருமல் போன்ற அறிகுறிகள் தென்படுவதாக உயிரியல் பூங்கா நிர்வாகம் தெரிவித்தது. புலிகள் மற்றும் சிங்கங்களிடம் வைரஸ் தொற்று எவ்வாறு இருக்கும் என்று தெரியவில்லை. எனினும் பூங்காவிலுள்ள அனைத்து விலங்குகளையும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம் என்று பூங்கா நிர்வாகம் மேலும் தெரிவித்தது. (இ)

## இந்தியாவில் 4,067 பேருக்கு கொரோனா தொற்று உறுதி



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்றுக்காலை 6 மணி நிலவரப்படி 4,067 ஆக உயர்ந்தது என மத்திய சுகாதாரத்துறை தெரிவித்தது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக 21 நாள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன் மூலம் சமூக தொற்று பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும் கொரோனா தொற்று அறிகுறியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த் தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்நிலையில் நேற்றுக் காலை இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர் களின் எண்ணிக்கை 4,067 ஆக உயர்ந்தது என மத்திய சுகாதாரத்துறை தெரிவித்தது.

மேலும் கொரோனாவுக்கு இந்தியாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 109 ஆக உயர்ந்தது. கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 292 ஆனது.

அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 690 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். தமிழ்நாடு - 571, டில்லி- 503, கேரளா - 314 ஆகிய மாநிலங்கள் அடுத்த இடங்களிலுள்ளன. (இ)

# வவுனியாவில் 8 மணித்தியாலங்கள் ஊரடங்கு தளர்வு பொருட்களைக் கொள்வனவு செய்ய குவிந்த மக்கள்

(வவுனியா)

ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 8 மணித்தி யாலங்கள் தளர்த்தப்பட்ட நிலையில் வவுனியா மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் அதிகளவு மக்கள் குவிந்தனர்.

கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்ததையடுத்து நாடு பூராகவும் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டது. இந் நிலையில் வவுனியா உள்ளிட்ட வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6 மணிக்குத் தளர்த்தப்பட்டது.

இதனையடுத்து அத்தியாவசியப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், மரக்கறிகள், எரிபொருள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் வங்கிகளில் பணம் பெறுவதற்காகவும் மக்கள் நகருக்கு வருகை தந்ததுடன் வங்கிகள், வர்த்த நிலையங்களின் முன்னால் நீண்ட வரிசையில் காத்திருந்தினர்.

வவுனியா பொலிஸார், போக்குவரத்து பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் நெரிசலைக் கட்டுப்படுத்தியதுடன், வவுனியா பொலிஸாரால் விழிப்புணர்வு அறிவித்தலும் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் மரக்கறி வியாபாரத்திற்காக வவுனியா, மன்னார் வீதியில் காமினி மகா வித்தியாலத்தியாலயம், வவுனியா கண்டி வீதி தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நகர சபையினரால் இடம் ஒதுக்கி வழங்கப்பட்டு நகரப்பகுதியில் பொதுமக்களின் நடமாட்டத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் நகரில் பொது மக்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலையிலேயே காணப் பட்டது. (இ-250)







## பட்டினிச்சாவு ஏற்படும் அபாயம்!

### அனந்தி எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தற்போதைய நிலைமை தொடருமானால் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படும் உயிரிழப்பை விட பல மடங்கு பட்டினிச் சாவுகளைத் தவிர்க்க முடியாமல் போகலாம் என்று ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் திருமதி அனந்தி சசிதரன் எச்சரித்தார்.

அவர் விடுத்த ஊடக அறிக்கையில்,

உலகை மிகவும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொடிய கொரோனா வைரஸ் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்களை நோயாளர்களாகவும் 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட உயிர்களையும் காவு வாங்கியது.

இலங்கையிலும் கிட்டத்தட்ட 175 இற்கும் மேற்பட்ட மக்கள் இந்நோய்த்தாக்கத்திற்குள்ளாகியிருக்கும் அதேவேளை 5 உயிர்களையும் காவுவாங்கியது.

நோயாளர்கள் நாளுக்கு நாள் புதிது புதிதாக இனங்காணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தடுப்பு மருந்துகள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்காத இச்சூழலில் இவ்வதிகரிப்பென்பது மக்களை மேலும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் என்பது இயல்பானதே.

மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ள நிலையில் அவர்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் சிக்கலுக்குள்ளாக்கியது. தொடர்ச்சியாக நீண்டு செல்லும் ஊரடங்குச் சட்டம் மூலமாக மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது.

இலங்கை அதிகம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நாடாக இருப்பதும் இந்நோய்த் தாக்கத்திற்கு ஓர் காரணமாக இருக்கலாம். இவ்வாறான நெருக்கடி நிலைமைகளில் மக்களின் உணவுத் தேவைகளை அரசின் திட்டமிட்ட பொறிமுறைகள் மூலமாகவே பூர்த்திசெய்ய முடியும்.

இச்சந்தர்ப்பத்தில் பல தன்னார்வலர்களும், பொது அமைப்புக்களும், அரசியல் தலைவர்களும் தன்னார்வமாக மக்கள் பணிபுரிவதைக் காணமுடிகிறது.

மேலும் பொதுவெளியில் மக்களைச் சந்தித்து உதவுவது மேலும் நோய் பரவக் காரணமாக அமைந்துவிடும். ஊரடங்கு வேளையில் தன்னார்வலர்களும் உதவுவது சவாலானவியடமே.

பொலிஸ் ஊரடங்கை இராணுவத்தை வைத்து நடைமுறைப்படுத்தும் அரசும் அதன் திணைக்களங்களும் மாவட்ட உணவு சேமிப்பு தளத்திலிருந்தோ அல்லது வேறெங்கிருந்தோ உணவு முதலான அத்தியாவசியப் பொருட்களை அனைத்து மக்களும் பயன் பெறும் வகையில் வீடுகளுக்கு சென்று வழங்க வேண்டும்.

அரசின் பேரிடர் அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, உணவு வழங்கல் அமைச்சு, என்பன துரிதமாகப் பணியில் இறங்கியிருக்க வேண்டும் ஆனால் இன்று வரை இவர்கள் தமிழர் பிரதேசங்களில் மனிதநேயப் பணிகள் எதிலும் ஈடுபடவில்லை.

சமுர்த்திப் பயனாளிகளுக்கு அரசால் அறிவிக்கப்பட்ட தொகையான 10,000 ரூபாய் கூட சரிவர வழங்கப்படவில்லை. இதில் 5000 ரூபாய்க்கு உணவுப் பொருட்களும் 5000 ரூபாய் பணமாகவும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தும் சமுர்த்திக்கடன் ஏற்கனவே பெற்றவர்களுக்கு இந்தக்கடன் இல்லை என்பதுடன் ஏற்கனவே 10,000 ரூபாய் சமுர்த்தி சேமிப்பில் இருக்க வேண்டும் என்பதும் நிபந்தனையாகப் பேசப்படுகிறது.

பல சமுர்த்தி அலுவலர்கள் பொறுப்புடன் செயற்படுவதாக தெரியவில்லை. ஒரு பிரதேசத்தில் 1500 ரூபாய் பொருட்கள் வழங்கப்படுகிறது. வேறோர் பிரதேசத்தில் 452 ரூபா பெறுமதியான 2.5கிலோ அரிசி 1.5 கிலோ மா, 600 கிராம் சீனி என்பவையே வழங்கப்பட்டன.

அதுவும் கட்டுப்பாட்டுவிலையை விட அதிக விலைக்கே பெறுமதியிடப்பட்டது.

பொது இடங்களில் கூட்டமாக மக்களை வரவைத்தே வழங்கப்படுகிறது. மாவட்டச் செயலகமோ பிரதேச செயலகமோ இதனைக் கண்டுகொள்வதாக தெரியவில்லை. மேற்கு நாடுகள் வீட்டிற்கு சென்று உணவுப் பொதிகளை வழங்குகின்றன. அத்துடன் மாதாந்த வருமானத்தில் குறிப்பிட்ட தொகையை வழங்குகின்றன. ஆனால், இலங்கையில் இதேநிலைமை தொடருமானால் கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்பை விட பல மடங்குபட்டினிச் சாவுகளைத் தவிர்க்க முடியாமல் போகலாம்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தவரை அரிசி உற்பத்தி கூட போதியளவு இல்லை. வன்னிக்கான பாதைகள் பூட்டப்பட்டு ஊரடங்கு நடைமுறையிலுள்ள இச்சூழலில் உணவுப் பஞ்சத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் தீவகப் பிரதேசங்கள் பாரிய உணவு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன. இப்பிரதேசங்களை விசேட கவனம் செலுத்தி அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## விவசாயிகளுக்கு ஓய்வூதியம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் விவசாயிகளுக்கான மாதாந்த ஓய்வூதியம் நேற்றுத் திங்கட்கிழமை வழங்கப்பட்டது.ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படாத போதிலும் விவசாயிகள் தமது ஓய்வூதியத்தை சாவகச்சேரி தபாலகம் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களுக்குச் சென்று பெற்றுக்கொண்டனர். (இ-30)

## சீனாவிலிருந்து வந்த 4 இலட்சம் பேர்

## அமெரிக்க அரசின் மெத்தனத்தாலேயே பாரியளவு பாதிப்பு - அதிர்ச்சித் தகவல்



(வோஷிங்டன்)

சீனாவில் கொரோனா வைரஸ் பரவியவுடன் அங்கிருந்து 4 இலட்சத்து 30 ஆயிரம்பேர் அமெரிக்காவுக்கு வந்துள்ளனர். அவர்களை உரிய முறையில் பரிசோதிக்காததால் அமெரிக்காவில் கொரோனா தொற்று நோய் பரவியது தெரியவந்தது.

உலகளவில் கொரோனா நோயாளிகள் எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்திலுள்ளது. இதற்கு அமெரிக்காவின் மெத்தனமே காரணம் என்று கூறப்படுகிறது. இதுதொடர்பாக, அமெரிக்காவின் முன்னணி பத்திரிகையான தநியூயோர்க்டைம்ஸில் அதிர்ச்சிகரமான செய்தி வெளியானது.

சீனாவில் கொரோனா வைரஸ் பரவியது பற்றி புத்தாண்டுக்கு முந்தைய நாளில்தான் சர்வதேச நாடுகளுக்கு அந்நாடு வெளிப்படுத்தியது. அதன்பிறகும் ஜனவரி மாதம், முதல் 2 வாரங்களுக்கு சீனாவிலிருந்து வருபவர்களை அமெரிக்க விமான நிலையங்களில் பரிசோதிக்க வில்லை. அதற்குள் சீனாவிலிருந்து, குறிப்பாக வுஹான் நகரிலிருந்து சுமார் 4 ஆயிரம் பேர் அமெரிக்காவுக்கு வந்து விட்டனர்.

ஜனவரி மாத மத்தியில்தான், விமான நிலையங்களில் அமெரிக்க அதிகாரிகள் பரிசோதனை செய்யத் தொடங்கினர். அதிலும், லாஸ் ஏஞ்சல்ஸ், சான் பிரான்சிஸ்கோ, நியூயோர்க் ஆகிய நகரங்களில் மட்டும் பரிசோதனை நடத்தப்பட்டது. அங்கும் கூட வுஹானிலிருந்து வந்தவர்களுக்கு மட்டும் பரிசோதனை நடத்தப்பட்டது.

பின்னர்தான் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பயணத் தடை விதித்தார். அவர் தடை விதிப்பதற்குள், சீனாவிலிருந்து 1,300 இற்கும் மேற்பட்ட நேரடி விமானங்களில் 17 அமெரிக்க நகரங்களுக்குக் 4 இலட்சத்து 30 ஆயிரம்பேர் வந்து விட்டனர். அவர்களில் பயணத்தடை அறிவித்த பிறகு 2 மாதங்களில் வந்த 40 ஆயிரம் பேரும் அடங்குவர். வந்தவர்களில், அமெரிக்கர்கள் மட்டுமின்றி வேறு நாட்டினரும் கணிசமாகவுள்ளனர். அவர்களைப் பற்றிய எந்த விவரங் களும் அமெரிக்க அரசிடம் இல் லை. அவர்களைக் கண்காணிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சீனாவிலிருந்து வேறு நாடுகள் வழியாக அமெரிக்கா வந்தவர்களைப் பற்றிய எந்த கணக்கும் அமெரிக்க அரசிடம் இல்லை.

பயணத்தடைக்குப் பிறகும், அமெரிக்கர்களுக்கு மட்டும் விலக்களிக்கப்பட்டு, பீஜிங் நகரிலிருந்து கடந்த வாரம் வரை விமானங்கள் வந்து கொண்டிருந்தன. அப்படி வந்த 279 விமானங்களில் ஆயிரக் கணக்கான அமெரிக்கர்கள் வந்துள்ளனர். அவர்களிடம் ஏனோதானோ என்று பரிசோதனை நடத்தப்பட்டது. இந்த மெத்தனமே நாட்டில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரிக்கக் காரணமாகும். கட்டுப்பாடுகள் கடுமையாகயிருந்தாலும், தாமதமாக அமல்படுத்தப்பட்டன. என நியூயோர்க் டைம்ஸ் மேலும் சுட்டிக்காட்டியது. (இ)

# தமிழர்கள் தன்னிறைவை அடைய பேரிடரைப் பயன்படுத்த வேண்டும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

நாம் தமிழர்கள் என்ற முறையில் எமக்குள் தன்னிறைவை ஏற்படுத்த இந்தப் பேரிடரைக் காரணமாக வைத்து முயற்சிக்க வேண்டும். புதிய புதிய சிந்தனைகள் தொழில் ரீதியாகவும், ஆய்வு ரீதியாகவும், சந்தைப்படுத்தல் போன்றவை ரீதியாகவும் எம்முன் உருவாகவேண்டும் என வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி :- தற்போதைய நெருக்கடிநிலை எவ்வளவு காலம் நீடிக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? தொடர்ந்து மக்கள் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினைகளை எவ்வாறு நாம் சமாளிக்கப் போகின்றோம்?

பதில் :-கொரோனா வைரஸின் தாக்கம் மாதக் கணக்கினுள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும் கூட அதனால் ஏற்படுத்தப்பட்ட உலக ரீதியான, நாடுகள் ரீதியான, மாகாணங்கள் ரீதியான, கிராமங்கள் ரீதியான, குடும்பங்கள் ரீதியான தாக்கங்கள் பல காலத்திற்கு எமக்குப் பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றன என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. உண்மையில் மனித சமூகமே ஒரு கலக்கல் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

நாம் யாவரும் இதுகாறும் எமது பயணத்தில் தங்குமிடம் இல்லாமல் வேகப் பயணத்தில் ஈடுபட்டிருந்தோம். எங்கும் எதிலும் வேகம் மட்டுமல்ல சுயநலமே அந்த வேகத்தின் உந்து சக்தியாகவும் இருந்துவந்துள்ளது.

மனிதர்கள் இதுகாறும் வாகனங்களில் விழுந்தடித்துக் கொண்டுசென்ற தெருக்களில் மிருகங்களும் பறவைகளும் ஜந்துக்களும் சாவகாசமாகப் பவனிவருவதை வலைப் பின்னல்களில் காணும் போது எந்தளவுக்கு எமது சுயநலம் மற்றைய உயிரினங்களை கவனத்திற்கெடுக்காமல் தான் தோன்றித்தனமான பாதையில் சென்றுகொண்டிருந்தது என்பதை உணர வைத்துள்ளது.

கொரோனாவை அழித்தொழிப்பதில் இன்று பூகோளரீதியில் ஒற்றுமை ஏற்பட்டிருக்கின்ற போதிலும், துரதிர்ஷ்டவசமாக இந்த நிலைமை தொடரப்போவதில்லை என்பதே எனதுகணிப்பு.

கொரோனாவின் தாக்கம் வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் மற்றும் வளர்ச்சி அடையாத நாடுகள் என்று ஒட்டுமொத்த உலகத்தினதும் பொருளாதாரத்தை புரட்டிபோட்டிருக்கின்றது. இன்னமும் சிலமாதங்களுக்கு இந்த நிலைமை தொடருமானால் நிலைமை மிகவும் மோசமடையும்.

ஆனால் கொரோனா அச்சுறுத்தல் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்பதே எமது எதிர்பார்ப்பு. கொரோனாவின் அச்சுறுத்தல் முடிவடைந்த கையோடு பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கானகடும் போட்டி உலகளாவிய ரீதியில் ஏற்படும். இதில் மூல வளங்களை சுரண்டுவதற்கான போட்டா போட்டிமுக்கிய இடம் பெறவாய்ப்பு உள்ளது. உதாரணமாக ,ஒருசில நாட்களுக்கு முன்னர் சீனாவுடன் பேசிபல இலட்சம் முக மூடிகளை கொள்வனவு செய்வதற்கு பிரான்ஸ் அரசாங்கம் ஏற்பாடுகளை செய்திருந்தநிலையில்,பிரான்ஸை நோக்கி சரக்குவிமானம் புறப்படுவதற்குத்தயாராக இருந்த இறுதித் தருணத்தில் அமெரிக்கா நான்கு மடங்கு கூடுதல் விலைபேசி அனைத்து முக மூடிகளையும் தனது நாட்டுக்குக் கொண்டு சென்று விட்டது. உயிர்வாழ்தலுக்கும்,பொருளாதாரத்துக்குமான போட்டியானது ஒழுக்க விதிகள்,மரபுகள் எல்லாவற்றையும் மீறி இப்பொழுதேதலை தூக்கஆரம்பித்துவிட்டதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

காரணம் உலகின் எந்த நாட்டை விடவும் கொரோனாவின் உக்கிரம் அமெரிக்காவில் அதிகமாக இருக்கிறது. அவர்களை பொறுத்தவரையில் சுய பாதுகாப்பு முதலிடம் பெறுகிறது.

இதனால்,நாடுகளுக்கு இடையேயான முரண்பாடுகளும் நாடுகளுக்குஉள்ளேயான இன, மத ரீதியானமுரண்பாடுகளும் எதிர் காலத்தில் பெரியளவில் கூர்மை அடையக்கூடும் என்பதே எதிர்பார்ப்பு.

இதனால் உலக ஒழுங்கிலும், சர்வதேசஉறவுகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படலாம். ஏற்கனவே இலங்கையில் இன ரீதியாகபெரும் ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்குந்தமிழ் மக்களுக்கு இதனால் பாதகமான பல விளைவுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதைநாம் இப்போதே உணர்ந்து கொண்டு எம்மை நாம் சுதாகரித்துக கொள்ள வேண்டும். ஆகவே, சரியான திட்டமிடல்களையும் முற்காப்பு நடவடிக்கைகளையும் நாம் இப்பொழுதிருந்தே மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்குத் தமிழ் மக்கள் இதுகாறும் பலவிதமானசிக்கல் நிலைகளுக்கு முகம் கொடுத்து அவற்றில் இருந்து விடுபட்டு வந்துள்ளார்கள் என்பதைநான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

பிரச்சனைகள் என்று கூறும் போது எமது பொருளாதார நிலையில் ஏற்பட்டுள்ள பின்னடைவே முக்கியத்துவம் பெறுகின்றது. மக்களின் வாழ்வுநிலையைத் தொடரவைக்கநாம் உடனே என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதே இன்றைய முக்கிய பிரச்சனையாக எழுந்துள்ளது. கொரோனாவிடம் இருந்து எம்மைப் பாதுகாக்க எடுக்க வேண்டிய வழிமுறைகளை அரசாங்கமும் எமது மருத்துவர்களும்,தனியார் அமைப்புக்களும் நாள்தோறும் விளக்கிக் கொண்டே இருக்கின்றனர்.

ஆனால் எமது அன்றாட உணவுத் தேவைகளை இனிவரும் மாதங்களில் எவ்வாறு உறுதிப்படுத்தப் போகின்றோம் என்பதே எமது தலையாய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. நாளுக்குநாள் பொருட்களின் விலைஏறிச் செல்கின்றது.

யுத்தகாலத்தில்,போருக்கு அப்பால்,மக்கள் நலம் சார்ந்த பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடைமுறையில் இருந்து வந்தமை அனைவர்க்கும் நினைவிருக்கும். அதுபோன்று வடக்கு, கிழக்கு மக்களை ஒன்றிணைத்து இங்குவாழ் மக்களிடையே தற்சார்பையும் தன்நிறைவையும் அடையாளப்படுத்தி மேம்படுத்தவேண்டியஅவசியமும் அவசரமும் இன்று ஏற்பட்டுள்ளது. இதற்குபுலம்பெயர் எமது உறவுகள் உற்றதுணையாகச் செயல்படவேண்டும். புத்திமான் பலவானாவான் என்பது சான்றோர்கள் பழமொழி.

ஆனால் அறிவால் சிறந்து விளங்கும் மக்களிடையே பொதுவாக ஒற்றுமை என்பது அரிய தொருபாண்டமாகும். அறிவின் பால்ப்பட்டவர்கள் சாதாரணமாக தாம் ஒவ்வொருவரும் மற்றவர்களைப் பார்க்கிலும் அறிவால் மேம்பட்டவர்கள் என்றுஎடுத்துக் காட்டவேமுனைவார்கள். அதே நேரம் மற்றவர்கள் தங்களிலும் பார்க்க ஒருசிறந்த இடத்தைப் பெறுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள். சிறப்புடைய வரை கீழே இழுத்து விழுத்தி அவரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தவேபார்ப்பார்கள். இந்தக் காரணத்தால்த் தான் போலும் இறைவன் சமூக இடர்களை, சர்வதேச இடர்களை இருந்திருந்து விட்டுவெளியிட்டுக் கொண்டிருக்கின்றான் என்றுநம்புகின்றேன். பேரிடர்கள் வரும் போது கூட ஒன்றிணையாதமனித கூட்டங்கள் அவமானத்திற்கும் பரிதாபத்திற்கும் உரியவர்கள். இதனை நான் கூறுவதற்குக் காரணம் உண்டு. இன்று எம் மக்களிடையே ஒருநெருக்கம், ஒருசகோதரத்துவம்,ஒற்றுமை,ஒருமைப்பாடு ஆகியன ஏற்பட வேண்டிய ஒரு சூழ்நிலைஎழுந்துள்ளது. ஒருபக்கம் சர்வாதிகாரத்திற்கு வித்திடக்கூடிய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. மறுபக்கத்தில் நாம் ஒற்றுமையற்று,ஓர்மையற்றுப் பிரிந்துவாழத் தலைப்பட்டுள்ளோம்.இது எமது வருங்காலத்திற்கு நன்மை பயக்காது.



இன்றைய பேரிடர் எம்மை ஒன்று சேர்க்க வேண்டும். ஒருமித்தகருத்துடன் எமது எதிர்கால சுபீட்சத்தைநோக்கிப் பயணிக்க உறுதுணையாய் அது அமைய வேண்டும். சுநாமியானது ஒரு சில நாட்களுக்கு அரசபடைகளையும் புலிப்படையையும் ஒருமித்து செயலாற்ற வைத்ததுபோல் நாம் யாவரும் எமது வருங்காலம் கருதி ஒருமித்துப் பயணிக்க முன்வரவேண்டும். இத ற்கு அடிமட்ட நிலையில் மக்கள் ஒன்று சேர வேண்டும்.

நாம் தமிழர்கள் என்ற முறையில் எமக்குள் தன்னிறைவை ஏற்படுத்தநாம் இந்தப் பேரிடரைக் காரணமாக வைத்து முயற்சிக்க வேண்டும். புதிய புதிய சிந்தனைகள் தொழில் ரீதியாகவும், ஆய்வுரீதியாகவும், சந்தைப்படுத்தல் போன்றவைரீதியாகவும் எம்முன் உருவாகவேண்டும்.

எமதுவிவசாயிகள் உடனே பயறு,உழுந்துபோன்ற 03 மாதப் பயிர்களை தமது நிலங்களில் விதைக்கவேண்டும். வீட்டுத் தோட்டம் செய்பவர்கள் மரக்கறி வகைகள், கீரை வகை களை மற்றும் மரவள்ளி போன்ற செடிகளை உடனே வளர்க்க முன் வர வேண்டும். இந்தப் பிரச்சனை வந்த உடனேயேநான் எனது வீட்டுக்காணியில் ப்ளாஸ்டிக் தொட்டிகளில் கத்தரி,வெண்டி,புடோல்,பாகல்,தக்காளி,மிளகாய் போன்ற பல செடி கொடிகளையும் கீரை வகைகளையும்வளர்க்கத் தொடங்கி விட்டேன். மரவள்ளியை ஆங்காங்கே நாட்டியுள்ளேன். விரைவில் இவற்றில் இருந்து அறுவடை கிடைக்கப் போகின்றது. கொழும்பில் பல தொடர்மாடிக் கட்டிடங்களில் தொட்டிகளில் மரக்கறிகள் யப்பான் போன்று வளர்க்கின்றார்கள்.

இவ்வாறு எம் மக்கள் மற்றவர்களை எதிர்பாராது தமது சுய தேவைகளைத் தாமே பூர்த்தி செய்யும் வகைகளில் வீட்டுத் தோட்டங்களைப் பராமரிக்க முன்வரவேண்டும். சனசமூக நிலையங்கள் இந்தத்தொழிற்பாட்டை ஊக்குவிக்க முன்வர வேண்டும். நல்லரக விதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தல், இரசாயனக் கலப்பற்றஉரத்தைப் பகிர்ந்துகொடுத்தல், இரசாயனம் கலவாத பூச்சிநாசினிகளை அறிமுகப்படுத்தல் போன்ற பல நடவடிக்கைகளில் அவை ஈடுபடலாம். வீட்டுத் தோட்டங்கள் காலா காலத்தில் பயன்தரும் நிலையில் உள்ளூர் மக்களிடையே தொடர்பை ஏற்படுத்தி பயன்களைப் பகிர்ந்துகொள்ளவும் வளமான உறவுநிலையைஉள்ளூர் மக்களிடையேஏற்படுத்தவும் சனசமூக நிலையங்கள் உறுதுணையாக நிற்கலாம்.

மொத்தத்தில் இன்றைய இடர் நிலை எம்மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவழி அமைக்க வேண்டும். தன்னம்பிக்கையை எம் மக்களிடையே வளர்க்க உறுதுணையாக நிற்க வேண்டும். தன்னிறைவை எம் மக்கள் பெற வழி செய்துகொடுக்கவேண்டும். கொரோனா நெருக்கடி நிலை படிப்படியாகத் தணிந்துபோகும். ஆனால் தன்நிறைவுக்கான எமது நடவடிக்கைகள் உடனே முழு மூச்சுடன் எம் எல்லோரதும் மத்தியிலும் நடைமுறைப்படுத்த இறைவன் துணை புரிய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கொரோனாவுக்கு எதிராக நீண்ட போர்

## பிரதமர் மோடி தெரிவிப்பு

(டில்லி)

உலகளாவிய ரீதியில் கொன்று குவித்து வரும் கொரோனா வைரஸ்க்கு எதிராக நீண்ட போருக்குத் தயாராகிவிட்டதாக இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார்.

பா.ஜ.கவின் 40ஆவது தொடக்க தினவிழாவை முன்னிட்டு நேற்றுக் கட்சித் தொண்டர்களுக்கு காணொலிக் காட்சி மூலம் பிரதமர் மோடி உரையாற்றினார்.

கொரோனாவுக்கு எதிராக இந்தியா, சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. வைரஸ் பரவலைத் தடுக்க இந்தியா தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

கொரோனா பரவலைத் தடுப்பதில் உலக நாடுகளுக்கு இந்தியா முன்னுதாரணமாக திகழ்கிறது. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு மாநில அரசுகள் வழங்கும் ஆதரவும் பாராட்டும் வகையில் உள்ளது.

மக்கள் ஊரடங்காக இருந்தாலும் சரி, நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவாக இருந்தாலும் சரி, நாம் அனைவரும் உறுதியாக நிற்கின்றோம். முன்னெப்போதும் இல்லாத வகையில் நாட்டின் 130 கோடி மக்களும் முதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த நாட்டு மக்கள் இத்தகைய ஒழுக்கத்தைக் வெளிப்படுத்துவார்கள் என்று யாரும் நம்பியிருக்க மாட்டார்கள்.

நேற்று முன்தினம் இரவு



நாட்டு மக்கள் காட்டிய ஒற்றுமை உணர்வைப் பார்த்தோம். கொரோனா வைரஸின் இருளை எதிர்த்துப் போராட கிராமங்கள் முதல் பெரிய நகரங்கள் வரை எண்ணற்ற விளக்குகள் ஏற்றப்பட்டன.

130 கோடி இந்தியர்கள் மேற்கொண்ட இந்த பெரிய நடவடிக்கைகள், எங்களை நீண்ட போருக்குத் தயார்படுத்தின. கொரோனாவுக்கு எதிராக இது நீண்ட போராக இருக்கும். அதற்காக நாம் சோர்ந்துபோய்விடக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அரச கால்நடை வைத்தியசாலை திருடர்களால் நேற்று உடைப்பு!

(இணுவில்)

இணுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் அரச கால்நடை வைத்தியசாலை திருடர்களால் உடைக்கப்பட்டது.இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ளதால் குறித்த கால்நடை வைத்தியசாலை மூடப்பட்டது. இதனைப் பயன்படுத்தி வைத்தியசாலையின் பிரதான கதவை உடைத்து திருடர்கள் உள்நுழைந்தனர்.

இதனை அவதானித்த அயலவர்கள் அந்த வைத்தியசாலைக்குள் செல்ல முற்பட்டபோது திருடர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். இந்நிலையில் கால்நடை வளர்ப்போர் சங்கப் பிரதிநிதி காந்தன் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபனிற்கும் கால்நடை வைத்திய அதிகாரிக்கும் சம்பவம் தொடர்பில் அறிவித்துள்ளார்.

ஊரடங்கு நேரத்திலும் உடனடியாக அங்கு சென்ற கஜதீபன் நிலைமைகள் தொடர்பில் அவதானித்து சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் அரச கால்நடை வைத்தியசாலை உடைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர். குறித்த கால்நடை வைத்தியசாலையில் கால்நடை மருந்துகள் மற்றும் அலுவலகக் கணனிகள் உட்பட்ட பெறுமதியான பொருட்கள் உள்ளதாக கால்நடை வளர்ப்போர் சங்கப் பிரதிநிதி காந்தன் தெரிவித்தார். (இ-89)



# இலங்கையில் 12 பகுதிகள் முற்றாக முடக்கம் அதிக கொரோனா தொற்றாளர்கள் கொழும்பில்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நேற்று முன்தினம் இரவு 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் 10 புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் இதுவரையில் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 176 ஆக உயர்ந்தது.

இந்நிலையில் 9 சிறார்கள் உட்பட 140 கொரோனா தொற்றாளர்கள் தொடர்ந்து மூன்று வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருவதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கண்டறியப்பட்ட தொற்றாளர்களில், நீர்கொழும்பு வைத்தியசாலையில் கடந்த மூன்றாம் திகதி முதல் சிகிச்சை பெற்றுவரும் நாலரை வயதுடைய குழந்தையும் உள்ளடங்குகின்றது.

அங்கொடை தேசிய தொற்று நோய்த் தடுப்பு வைத்தியசாலை, முல்லேரியா ஆதார வைத்தியசாலை மற்றும் வெலிகந்த ஆதார வைத்தியசாலை ஆகியவற்றிலேயே இவர்கள் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதனைவிட நாடளாவிய ரீதியில் மேலும் 30 வைத்தியசாலைகளில் கொரோனா தொற்று சந்தேகத்தில் 259 பேர் சிகிச்சைப் பெற்று வருவதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் மொத்தமாக 15 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களில் அதிகமானோர் கொழும்பில் அடையாளம் காணப்பட்டனர்.

கொழும்பு மாவட்டத்தில் இதுவரை அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 45 வரை அதிகரித்தது. இதற்கு அடுத்தபடியாக புத்தளம், களுத்துறை மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்பட்ட நிலையில், கம்பஹா, கண்டி, யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் கொரோனா தொற்றாளர்கள் தொடர்ச்சியாக அடையாளம் காணப்பட்டதால், அப்பகுதிகளிலும் அச்சுறுத்தல் நீடிக்கின்றது.

இந்நிலையில் கொரோனா அச்சுறுத்தல் தொடர்பில் நிலையான முடிவொன்றை எடுக்க, தற்போது நிலவும் ஊரடங்கு உள்ளிட்ட கட்டுப்பாடுகள் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை தொடர வேண்டும் எனவும் அப்போதே கொரோனா பரவல் குறித்த தெளிவான முடிவொன்றுக்கு வரமுடியும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவும் சூழல் மற்றும் முறைமையை அடிப்படையாக கொண்டு நோக்குமிடத்து தற்போதைய கால கட்டம் மிக முக்கியமானது எனவும் இதே கட்டுப்பாடுகள் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை தொடர வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் இதுவரை கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்ட, பரவலுக்கான அதிக வாய்ப்புக்கள் உள்ள 12 பகுதிகள் முற்றாக முடக்கப்பட்டன. யாழ். மாவட்டத்தின் அரியாலை - தாவடி பகுதியும், களுத்துறை மாவட்டத்தின் அட்டுலுகம மற்றும் பேருவளையின் சில பகுதிகள் கண்டி மாவட்டத்தின் அக்குரணை, புத்தளம் மாவட்டத்தின் கடையன்குளம் மற்றும் நாத்தாண்டியின் ஒரு பகுதி, கம்பஹா மாவட்டத்தின் கொச்சிக்கடை - போரத்தொட்டை, கொழும்பு மாவட்டத்தின் கிராண்பாஸ் பொலிஸ் பிரிவின் டி வாஸ் லேன், மருதானை பொலிஸ் பிரிவின் இமாமுல் அரூஸ் மாவத்தை, ரத்மலானை - அர்ஜனமாவத்தை, குருணாகல் மாவட்டத்தின் - கட்டுபொத்தை - கெக்குனுகொல்ல பிரதேசத்தின் ஒரு பகுதி, மத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ - அக்குரஸ்ஸ- மாலிதுவ -கொஹூகொட பகுதி ஆகியனவே இவ்வாறு முற்றாக முடக்கப்பட்ட பகுதிகளாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்ற நிலையில் அத்திட்டிய, ரத்மலானை மற்றும் வெல்லம்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட சுகாதார அதி காரிகளின் கணிப்பீட்டின் படி ரத் மலானை ஸ்ரீ ஜனமக மாவத்தை முற்றாக முடக்கப்பட்டதாக இரத் மலானை மருத்துவ அதிகாரி ஜே.எம்.குணதிலக தெரிவித்தார்.

அத்துடன் வெல்லம்பிட்டிய, அத்திடிய பகுதிகளிலும் தேவையான பாதுகாப்பு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் புதிதாக முடக்கப்பட்ட பகுதிகளில் மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ - அக்குரஸ்ஸ, மாலிதுவ - கொஹூகொட பகுதியும் இணைந்தது. அப்பகுதியில் ஏற்கனவே தனிமைப்படுத்தலுக்குள்ளான ஒருவருக்கு கொரோனா தொற்றிருப்பது கண்டறியப்பட்ட நிலையில் அப்பகுதி முற்றாக முடக்கப்பட்டது.

இதனிடையே, வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய நிலையில் பொலிஸ் நிலையங்களில் சுய தனிமைப்படுத்தலுக்காக பதிவு செய்தோர் 43 ஆயிரத்து 500 பேர் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இவர்களில் 18 ஆயிரம் பேர் சுய தனிமைப்படுத்தலை நிறைவு செய்ததாகவும் தற்போதும் 25 ஆயிரத்து 500 பேர் வரை சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் 11 ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கைக்குள் வந்து பதிவு செய்தவர்களே இவர்கள் எனச் சுட்டிக்காட்டிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, இக்காலப் பகுதியில் இலங்கைக்குள் வந்து மீள வெளிநாடு செல்ல முற்படும் அனைவரும் தனிமைப்படுத்தல் நிறைவை உறுதிச் செய்யும் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ)

## இந்தியாவின் தலைநகரில் நடந்த இஸ்லாமிய மத நிகழ்வில் கலந்துகொண்ட 4 இலங்கையர்களுக்கு கொரோனா தொற்று



(டில்லி)

இந்தியத் தலைநகரில் இடம் பெற்ற இஸ்லாமிய மத நிகழ்வில் கலந்துகொண்ட நான்கு இலங்கைப் பிரஜைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை மருத்துவப் பரிசோதனைகளின் மூலம் உறுதியானது என இந்துஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டது. இந்த நால்வரும் தனிமைப் படுத்தப்பட்டு குருதி மாதிரிகள் பரி சோதனைக்கு அனுப்பப்பட்ட வேளை நோய்த் தொற்று உறுதியானது என அதிகாரிகள் தெரிவித்ததாக அந்த ஊடகம் தெரிவித்தது. (இ)

## வவுனியாவில் இலவசமாக மரக்கறிகள் விநியோகம்



(வவுனியா)

வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் நேற்றுத் தளர்த்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து பொது மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வவுனியா நகரிற்கு அதிகமாக சென்றனர்.

இந்நிலையில் வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றால் மரக்கறி வகைகள் பொது மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

சுமார் 25 ஆயிரம் கிலோ மரக்கறிவகைகள் நேற்றுக்காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை இலவசமாக வழங்கப்பட்டது.

இதேவேளை வங்கிகள் மற்றும் வவுனியா பொது வைத்திய சாலைக்கு நேற்று அதிகளவான பொது மக்கள் சென்ற நிலையில் நீண்ட வரிசையில் நின்று தமது சேவைகளைப் பூர்த்தி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-299)

# கடந்த 24 மணித்தியாலத்தில் 1,327 பேர் பொலிஸாரால் கைது

## 16 நாட்களில் 14,795 பேர் சிக்கினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்டதாக நேற்றுக் காலை 6 மணிவரையிலான 24 மணித்தியாலத்தில் 1,327 பேர் கைது செய்யப்பட்டனர்.

அத்தோடு கடந்த 16 நாட்களுக்குள் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்டதாக 14,795 பேர் கைது செய்யப்பட்டனர். கொவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 6 மணி முதல் பொலிஸ் ஊரடங்குச்சட்டம் அமுல் படுத்தப்பட்டது.

இந்நிலையில் மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கால அவகாசம் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு எட்டு மணித்தியால கால அவகாசம் வழங்கப்பட்டு மீண்டும் ஊரடங்கு நீடிக்கப்பட்டு வருகின்றது.



இதேவேளை நேற்று 19 மாவட்டங்களில் ஊரடங்கு, 8 மணித்தியாலங்கள் தளர்த்தப்பட்ட போதிலும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கு மீள அறிவிக்கும் வரை ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## இலங்கை ரூபாய் கடும் வீழ்ச்சி



(கொழும்பு)

வரலாற்றில் முதன் முறையாக அமெரிக்க டொலருடன் ஒப்பிடு கையில் இலங்கை ரூபாயின் பெறுமதி மிக மோசமான வீழ்ச்சியைச் சந்தித்தது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில், அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 199 ரூபாவைக்கடந்தது.

டொலர் ஒன்றின் விற்பனை விலை 199 ரூபாய் 40 சதமாகப் பதிவானது குறிப்பிடத்தக்கது. (இ)

# பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மன்னாரில் நேற்று முண்டியடித்த மக்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 6 மணியளவில் தளர்த்திக்கொள்ளப்பட்ட நிலையில் மக்கள் வழமைக்கு மாறாக பொருட்களைக் கொள்வனவு செய்வதில் முந்தியடித்துக் கொண்டனர்.

பல் பொருள் விற்பனை நிலையங்களில் மக்கள் வரிசையாக நின்று பொருட்களைக் கொள்வனவு செய்தனர். மேலும் மன்னார் சந்தைப் பகுதியில் மக்கள் முண்டியடித்துக் கொண்டு பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

குறிப்பாக மன்னார் புதிய பேருந்து நிலையப் பகுதியில் தற்காலிகமாக மரக்கறிகள் விற்பனை இடம்பெற்றது.

முகக்கவசம் அணியாது சமூக இடைவெளியைப் பேணாது செயற்பட்டவர்களை பொலிஸார் எச்சரித்ததோடு, முகக்கவசத்தை

## இராணுவம், பொலிஸ் விசேட பாதுகாப்பு

அணியுமாறு அறிவுறுத்தினர்.

மேலும் மன்னார் நகர் முழுவதும் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மன்னார் பிரதான பாலத்தடியில் அமைந்துள்ள இராணுவத்தின் சோதனைச்சாவடியில் மன்னாரிலிருந்து வெளியில் செல்லும் மற்றும் மன்னாருக்குள் வரும் மக்களின் அடையாள அட்டையை இராணுவத்தினர் சோதனை செய்தனர்.

வெளிமாவட்டத்தில் உள்ளவர்கள் மன்னாருக்குள் வருவதைக் கட்டுப்படுத்த குறித்த நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

இதே வேளை மன்னார் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 105 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இது வரையான காலப் பகுதியில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 11 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-285)





# கொரோனாவுக்கு எதிரான போரில் சுய ஒழுக்கத்தை கடைப்பிடியுங்கள்

(லண்டன்)

கொரோனாவுக்கு எதிரான போரில் சுய ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டுமென இங்கிலாந்து மக்களுக்கு ராணி எலிசபெத் அழைப்பு அறிவுறுத்தினார்.

இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அங்கு கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 42 ஆயிரத்தைக் கடந்துள்ளது. மேலும் பலி எண்ணிக்கை 4,500ஐ எட்டியது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக ராணி இரண்டாம் எலிசபெத் நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். காணொலியாகப் பதிவு செய்யப்பட்ட அவரது உரை, தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது. தனது உரையில் ராணி தெரிவிக்கையில்,

தற்போது நம் நாட்டுக்கு ஒரு துயரமான மற்றும் சவாலான நேரமிது என்பதை நான் அறிவேன். இந்தப் பெரும் சவாலை நமது மக்கள் எவ்வாறு எதிர்கொண்டனர் என்பதை எண்ணி எல்லோரும் பெருமிதம் கொள்ள முடியும்.

இந்தத் தலைமுறையின் இங்கிலாந்து மக்கள் எதனையும் சமாளிக்கும் வலிமையுடையவர்கள் என்று நமது பின் சந்ததியினர் கூறும் வகையில் சிறப்பாக நடந்து



கொள்ள வேண்டும்.

சுய ஒழுக்கம், நற்பண்புகள், அமைதியான நல்ல எண்ணம், சமூகத்தினரின் பண்புகள் ஆகியவை நம் நாட்டை மேலும் வலுப்படுத்துகின்றன.

எனவே கொரோனாவுக்கு எதிரான போரில் நாட்டு மக்கள் சுய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

நம் நாட்டில் துயரமான தருணம். சிலருக்கு வருத்தம், பலருக்கு நிதிச் சிக்கல்கள், நம் அனைவரின் அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்கள், இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

எனினும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு கொரோனாவை வெல்வோம். இந்த நேரத்தில் கொரோனாவுக்கு எதிரான போரில் முன்னணியில் நிற்கும் வைத்தியர்கள், சுகாதாரப் பணியாளர்களை நான் பாராட்டுகின்றேன் என ராணி மேலும் தெரிவித்தார். (இ)

# மெக்சிக்கோவில் போதைப்பொருள் கும்பல்களுக்கு இடையே மோதல்!

## 19 பேர் உயிரிழப்பு

(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோவில் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையே நடந்த மோதலில் 19 பேர் பலியான நிலையில் 2 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

உலகிலேயே மெக்சிக்கோவில் தான் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் அதிகளவில் நடக்கின்றன.

இதனால் அங்குள்ள போதைப் பொருள் கடத்தல் கும்பல்கள் தொழில் போட்டி காரணமாக அடிக்கடி மோதிக்கொள்கின்றன.

இதுபோன்ற மோதல்களில் ஏராளமானவர்கள் கொல்லப்படுகின்றனர்.

இந்த நிலையில் அந்த நாட்டின் வடக்குப் பகுதியிலுள்ள சிஹுவாஹுவா மாகாணத்தில் 2 போதைப்பொருள் கும்பல்களுக்கு இடையே பயங்கர மோதல் வெடித்தது.

இருதரப்பினரும் துப்பாக்கிகளால் சுட்டும், கையெறி குண்டுகளை வீசியும் பயங்கரமாக மோதிக் கொண்டனர்.

இதனால் அந்த இடமே போர்க் களமாக காட்சியளித்தது. இதுபற்றி தகவல் கிடைத்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். பொலிஸாரைப் பார்த்ததும் இரு கும்பலைச் சேர்ந்தவர்களும் அங்கிருந்து தப்பியோடினர்.

மோதல் நடந்த இடத்தில் 19 பேர் சடலமாகக் கிடந்தனர். மேலும் 2 பேர் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தனர். பொலிஸார் அவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். (இ)

# முல்லையில் தனிமைப்படுத்தப்பட்ட 203 பேர் நேற்று வெளியேறினர்





(முல்லைத்தீவு)

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்களை 14 நாட்கள் தனிமைப்படுத்தல் செயற்திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் விமானப்படைத் தலைமையகத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்த 203 பேர் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுக் காலை 6 மணியளவில் விடுவிக்கப்பட்டு அவர்களுடைய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

நேற்றுக் காலை குறித்த விமானப் படை முகாமில் வைத்திய பரிசோதனைகள் இடம்பெற்று அவர்களுக்காக மருத்துவ சான்றிதழ்கள் விமானப்படையின் பொறுப்பதிகாரியால் வழங்கப்பட்டது. பின்னர் இராணுவ பேருந்துகளில் அவர்களுடைய சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தக் குழுவில் ஐந்து பௌத்த துறவிகளும் உள்ளடங்கியமை குறிப்பிடத்தக்கது. (இ-281)

# இளைஞன் உயிரிழந்ததால் ஊரடங்கு தளர்த்தப்படவில்லை

(அரநாயக்க)

நேற்று 19 மாவட்டங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்ட போதும் கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க பிரதேசத்தில் ஊரடங்கு தளர்த்தப்படவில்லை.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இளைஞன் ஒருவர் அப்பிரதேசத்தில் மரணமடைந்ததைத் தொடர்ந்து அரநாயக்க பொலிஸர், ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படாதென நள்ளிரவு வேளையில் ஒலிபெருக்கி ஊடாக அறிவித்தனர்.

மேற்படி இளைஞனின் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை.

அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

வைத்திய அறிக்கை வரும் வரை மேற்படி பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் அரநாயக்க தெபத்கம என்ற இடத்தில் வசிப்பவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)